**தலைப்பு 112 – வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 112- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 07 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்கான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 10,106 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 8,544 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சின் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,562 மில்லியன் அதாவது 15 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக, சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 9,025 | 8,010 | 1,045 | 11 |
| மூலதன | 1,081 | 534 | 547 | 51 |
| மொத்தம் | 10,106 | 8,544 | 1,562 | 15 |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 11201 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 38.19 | 25.50 | 23.19 | 29.11 | 133.50 | 93.79 |

**2.3 கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள 5 கட்டுநிதிக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 737 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 7002/0000/00/0035/0010/000 | 97 |
| 7002/0000/00/0035/0011/000 | 14 |
| 7002/0000/00/0035/0012/000 | 73 |
| 7002/0000/00/0035/0013/000 | 84 |
| 7002/0000/00/0035/0015/000 | 469 |
| மொத்தம் | **737** |

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள 02 கட்டுநிதிக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 706 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0006/0071/000 | 32 |
| 6000/0000/00/0015/0025/000 | 674 |
| மொத்தம் | **706** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

வெளிநாட்டலுல்கள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சால் கீழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஈ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

**3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2016 மே 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 172.82 மில்லியன் கூட்டுத்தொகையான தேறிய நிதி ஏற்பாடும் பயன்படுத்தப்படாது முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 06 செலவின விடயங்களுக்காக மிகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 69 சதவீதம் முதல் 89 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 3.4 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சினால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த 05 கட்டுநிதிக் கணக்குகளுக்குரிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 365.37 மில்லியனாக இருந்தது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரி புத்தகங்களின் படி கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 737.22 மில்லியனாக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு அமைச்சினதும் வெளிநாட்டுத் தூதுவராலயங்களிலும் தீர்க்கப்படாதிருந்த முற்பண மீதி, வெளிநாட்டு தூதரகங்களின் காசு மீதி, வழியில்நின்ற காசு மீதிகள் மற்றும் ஏனைய சீராக்கங்களின் கூட்டு மொத்தம் ரூபா 687.99 மில்லியன் ஆனமையால் கட்டுநிதிக் கணக்கில் இணக்கஞ் செய்யப்படாத மீதி ரூபா 49.23 மில்லியனாக இருந்தது.

(இ) வெளிநாட்டு தூதுவராலயங்களில் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த முற்பணங்களின் பெறுமதி ரூபா 273.93 மில்லியனாக இருந்தது. அந்த பெறவேண்டிய மீதிகளில் ரூபா 178.78 மில்லியன் தொகை 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலும், ரூபா 58.80 மில்லியன் மீதி 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலும், ரூபா 36.35 மில்லியன் தொகையான மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது வைப்புக் கணக்கிலுள்ள ரூபா 144.84 மில்லியன் கூட்டுத்தொகையான மீதி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்ட போதிலும் அந்த மீதி தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று தயாரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்குரிய பொது வைப்புக் கணக்கில் ரூபா 32.07 மில்லியன் மீதியொன்று 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த மீதி 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வடக்கு உறவு (உத்துறு மித்துறு) புகையிரத வீதி செயற்திட்டத்திற்காக ரூபா 2.07 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் அத்தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிப்பிரமாணம் 565(2) இன் பிரகாரம் பொது வைப்புப் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) வெளிநாடுகளில் தொழில்புரிகின்ற இலங்கையர்கள் இடர்களுக்கும் மரணங்களுக்கும் உட்படுவதன் காரணமாக அந்த நாடுகளில் நீதிமன்றங்களின் மூலம் தீர்மானிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணமான ரூபா 7.38 மில்லியன் அவர்கள் சேவையாற்றிய நிறுவனத்தினால் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த இழப்பீட்டுப் பணம் உரிய உத்தாளிகளுக்கு வழங்கப்படாமல் வெளிநாட்டுத் தூதரகங்களின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 11201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.69 மில்லியன் ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்தன. நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) சீசீ - 10 பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 104,286 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று இணக்கக்கூற்றின் கடன்பட்டோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரேசில் தூதுவர் அலுவலகத்தில் சேவையை விட்டுச் சென்றவரிடமிருந்து 2015 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 94,868 ஆகக் காணப்பட்ட கடன் மீதி கடன்பட்டோர் பதிவேட்டில் குறிப்பிடப்படாது பதவியணியின் ஊழியரொருவராக இணக்கக்கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அமைச்சில் காணப்படுகின்ற 14 செயற்பாட்டுப் பிரிவுகளுக்கிடையே நிதிப்பிரிவு மற்றும் பொது நிர்வாகப் பிரிவு என்பவற்றை உள்ளடக்கிய 12 பிரிவுகள் தொடர்பான தகவல்கள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின்போது 02 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டிற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் குத்தகைப் பெறுமதி ரூபா 55 கொண்ட பெறுமதியான இரண்டு அதிசொகுசு பஸ் வண்டிகள் 2013 நவம்பர் 01 ஆம் திகதி குத்தகை முறைமையின் கீழ் பெறப்பட்டிருந்தது. அதற்கான மாதாந்த தவணைப்பணம் மற்றும் வட்டியாக ரூபா 916,752 வீதம் 60 தவணைகளில் செலுத்தும் இணக்கப்பாட்டிகள் அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது இந்த இரண்டு பஸ் வண்டிகளுக்காக தவணைப்பணம் மற்றும் வட்டியாக முறையாக ரூபா 6.47 மில்லியன் மற்றும் ரூபா 5.45 மில்லியன் ஆக ரூபா 11.92 மில்லியன் கூட்டுமொத்தமாகச் செலுத்தப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் இந்த இரண்டு பஸ் வண்டிகளும் எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் அமைச்சின் வாகனத்தரிப்பிடத்தில் விலைவற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**3.9 இணங்காமைகள்**

1990 மே 18 ஆந் திகதிய 26/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் விழா செயற்பாடுகளின் போது மதுபான உபசரிப்புக்களைச் மேற்கொள்ளக் கூடாதெனினும் அந்த விதியை பின்பற்ற வேண்டி இருந்த போதிலும் மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 2.69 மில்லியன் பெறுமதி மதுபானங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

**3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

**வெளிநாட்டுத் துாதகரங்களுக்காக முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களை நியமித்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு துாதகரங்களில் காணப்படுகின்ற முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளுதல் பொதுவான நடைமுறையாக இருந்தது. அமைச்சினால் 2014/2015 ஆம் ஆண்டின் பரீட்சை பெறுபேறுகளுக்கு புறம்பாக வெளிநாட்டு துாதரகங்களின் சேவைக்காக 14 உத்தியோகத்தாகள் நியமிக்கப்பட்டிருந்தனர். மேற்கூறப்பட்ட 14 உத்தியொகத்தர்களுக்கிடையே 5 உத்தியோகத்தர் அரசாங்க முகாமைத்துவ சேவைக்கு உரித்தல்லாத உத்தியோகத்தர்களாக இருந்தனர்.

(ஆ) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை துாதரகங்களுக்காக தனிப்பட்ட உதவியாளர்களாக 8 உத்தியோகத்தர்கள் பரீட்சை நடைமுறைகள் இன்றி 2015 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்டிருந்தனர்.

**3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

5975 வத்திக்கான் கொடிகளை (3x6) கொள்வனவு செய்வதற்காக அமைச்சில் பதிவு செய்த வழங்குனர்களிடமிருந்து கேள்வி கோரப்பட்டிருந்தது. அமைச்சினால் கேள்வி கோரும் போது தேவையான நியமங்கள், பூர்த்தி தரம், நிலைமை மற்றும் மூலப்பொருளின் வகை எத்தகையது போன்ற மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகக்குறைந்த கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்தினால் மேற்கூறப்பட்ட தேவைகளுக்கிணங்க நடவடிக்கை எடுக்காமையினால் அக்கேள்வி நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆகக்கூடிய கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 5975 கொடிகள் ரூபா 8.96 மில்லியனினுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் மிகவும் போட்டித் தன்மையுடன் அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் நிறைவேற்றுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**பிரயாணப் பொதிகளை துறைமுகத்திலிருந்து விடுவித்தல்**

பிரயாணப் பொறிகளை துறைமுகத்திலிருந்து விடுவிக்கும் போது அது தொடர்பாக முறையான திட்டமொன்று அமைச்சினால் பின்பற்றப்படாதிருந்தமை கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகளிலிருந்து அவதானிக்கப்பட்டது.

(அ) 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 யூன் 30 ஆந் திகதி வரை பிரயாணப் பொதிகளை விடுவிக்கும் போது தாமதக் கட்டணமாக ரூபா 578,335 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) உத்தியோகத்தர்கள் பிரயாணப் பொதிகளை எடுத்துச் செல்லும் போது அதற்காக வாடகைக்குப் பெறப்பட்ட கொல்கலன்களுக்காக வைக்கப்பட்ட வைப்பினை மீள அறவிடுவதற்கோ அல்லது ஓய்வு பெறச் செய்வதற்கோ அல்லது முகவர் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது கழித்துக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின்போது விடுவிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்ட கொள்கலன்களுக்குரிய வைப்பு ரூபா 15,000 இனை அறவிடுவதற்கோ அல்லது கொடுப்பனவு செய்யும் போது கழித்துக் கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.13 மனித வள முகாமைத்துவம் (வெளிநாட்டு தூதரகங்கள் நீங்கலாக)**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 16 | 15 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 03 | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 359 | 281 | 78 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 134 | 135 | - | 01 |
| | மொத்தம் | **516** | **434** | **83** | **01** |